1993 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது கடிதம் எழுதியதாகவும், அதற்கு மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்திருப்பதாகவும் சொன்னார்கள். அதுபோன்ற குறிப்புகள் அரசிடத்திலே இல்லை. அந்த கடிதங்களை தருவார்களேயானால் மீண்டும் இந்த தமிழக அரசு இதை பரிந்துரை செய்து ரெயில்வே வாரியத்திற்கு மீண்டும் அதை நினைவூட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 408, திரு. ஆ. சுப்புரத்தினம், இருக்கையில் இல்லை.

வினா எண் 409, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

409—

முடங்கியார் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*11406— திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதி, முடங்கியார் பகுதியில் 110/11 கே. வி. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) துணை மின் நிலையம் அமைப்பதற்காக தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடந்துகொண்டிருக்கிறது. நிலத்தைக் கையகப்படுத்தியவுடன் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ராஜபாளையம் தொகுதியில் கடந்த 3, 4 ஆண்டுகளாக பவர் பொசிசன், பவர் டிப் இருப்பதால் அந்த ஏரியாவில் குடிதண்ணீர் சப்ளை செய்யும் எலக்ட்ரிகல் மோட்டார்கள், கிட்டத்தட்ட ஒவ்வொரு சமயத்திலே 110-க்குக் கீழே வந்துவிடுகிறது. 220 வோல்ட் இருக்கவேண்டிய இடத்தில் 101க்கு குறைந்துவிடுவதால் மோட்டார் கரண்ட் அதிகமாகி நிறைய எலெக்ட்ரிகல் மோட்டார்கள் ஒயிண்டிங் கெட்டு பழுதடைந்துவிடுகிறது. அதனால் குடி தண்ணீர் சப்ளை பாதிக்கப்படுகிறது. இந்த நிலையில் இந்த மின் நிலையம் 1992, 1995,

வருடங்களில் எஸ்டாபிளிஷ் பண்ணுவதற்கு ஆர்டர் இருக்கிறது. அப்படி இருந்தும் கடந்த 1992 ஆம் ஆண்டு நிலம் கையகப் படுத்தப்பட்டு அந்த இடம் கேன்சல் ஆகி திரும்பவும் புறம்போக்கு இடம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி போனால் மிகவும் கால தாமதமாகிறது. ஆகையால் இந்த சப் டிவிஷனை விரைவில் அமைத்து இதோடு தூத்துக்குடியிலே ஜெனரேட் ஆகும் பவர் கிரிட்—ல் கனக்ட் பண்ணுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த துணை மின் நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1½ ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிக விரைவிலே அந்த பணிகள் எல்லாம் துவங்கப்பட்டு துணை மின் நிலையம் விரைவிலே வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த துணை மின் நிலையம் வந்ததற்குப் பின் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 410, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

410—

கொள்ளிடம் ஆற்றில் தரைப்பாலம் அமைத்தல்.

*11804— திரு. என். ஆர். ராஜேந்திரன்,
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, முட்டம் கிராமம் வழியாக கொள்ளிடம் ஆற்றின் அக்கரையை கடக்க அணைக்கரையை சேர்ந்த பாலத்தை மக்கள் உபயோகப்படுத்துவதால் தரைப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.